சுற்றாடல் முன்னோடி கழகம்

செயற்பாடு . 2

# எனது பிரதேசத்தில் சுற்றாடல் கூருணர்வுமிக்க இடமொன்றின் சுற்றாடல் சிக்கலொன்று பற்றி அறிக்கை




M A Afeer
GREADE 11
KM/KM/ZAHIRA COLLEGE
KALMUNAI

# ஆய்வுச் சுருக்கம்

நிந்தவூர் பிரதேசத்தில் உள்ள கடற்கரை பிரதேசத்தில் ~~கார அறிவுக்கு~~ காரைதீவுக்கு செல்லும் வழியில் காணப்படும் கடற்கரை பிரதேசத்தில் அதிகளவிலான குப்பைகள் காணப்படுகின்றது. இக் குப்பைகள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதுடன் நோய் பரவுவதற்கும் ஏதுவாக காணப்படுகின்றது. இந்த குப்பைகளை விலங்குகள் உண்பதால் விலங்குகளுக்கும் பிரச்சினை ஏற்படுவதுடன் மனிதர்களும் நுளம்பு மூலம் பாதிக்கப்படுகின்றனர். அதாவது இக்குப்பைகளில் அதிகளவிலான பிளாஸ்டிக் ~~பிரதிபோம் கொளுத்தி~~ பொலித்தீன் போன்ற உக்காத கழிவுகளள் காணப்படுகின்றது. இந்த கழிவுகளில் மழைநீர் தேங்குவதால் டெங்கு நுளம்புகள் உருவாகுவதற்கான அபாயம் காணப்படுகின்றது.

மேலும் இங்கு இந்த குப்பைகளினுள் மனித கழிவுகளும் காணப்படுகின்றது. அதாவது சிறு பிள்ளைகளின் மலம் இவ்வாறு பல குப்பைகள் கிடப்பதால் அதிகளவிலான துர்நாற்றமும் வீசக்கூடியதாக காணப்படுகின்றது.

இதனை சரி செய்யும் நோக்கில் சுற்றாடல் முன்னோடிகளால் சிரமதான பணி ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது அச்சிரமதான பணியில் பலர் இணைந்ததுடன் நிந்தவூர் Lions club அனுசரணை வழங்கியது.

மேலும் இவ்வாறு அதிக குப்பைகள் கிடப்பதால் சுற்றுச்சூழலில் வாழும் மக்களுக்கும் பாதிப்பாக உள்ளது என அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் கூறினர்.

# அறிமுகம்

உலகளாவிய ரீதியில் நாடுகளை பொதுவாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என இரண்டு வகைப்படுத்தலாம். இத்தகைய இரண்டு வகை நாடுகளும் குடித்தொகை அதிகரிப்பு நகர அபிவிருத்தி கைத்தொழில் மயமாதல் என்பன பொதுவாக காணப்படுகின்றன. குடித்தொகை அதிகரிப்பிற்கு தேவைகளும் அதிகரித்து கொண்டு செல்கின்றது.

இத்தகைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு மனிதன் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றான். இத்தகைய பிரச்சினைகளில் ஒன்றாக சுற்றாடல் சிக்கல் காணப்படுகின்றது. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்கள் கைத்தொழில் மயமாதல் நகரமயமாதல் போன்ற காரணங்களால் சுற்றுச்சூழல் மாசடைகின்றது.

மாசுபடுவதன் ~~இம்மாசாரவின்~~ காரணமாக சூழலில் வாழும் அனைத்து உயிரினங்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. எனவே அப்பிரச்சினையை இனம் கண்டு தீர்வினை நான் முன்மொழிவு ~~வேண்~~ செய்கின்றேன்.




கடற்கரை வீதி
2 years ago




கடற்கரை வீதி
2 years ago

# இவ்வாறு குப்பைகள் சேருவதால் ஏற்படும் பிரச்சினை

## 1. பிளாஸ்டிக்கினால் ஏற்படும் பிரச்சனை

பிளாஸ்டிக் பொருட்கள் பல்வேறுபட்ட இருசான மாற்றங்களுக்கு உள்ளாகி சூரிய ஒளி வெப்பநிலை காரணமாக மைக்ரோ பிளாஸ்டிக் அடைகிறது இந்த மைக்ரோ பிளாஸ்டிக் நீர்நிலைகள் கடலின் ஊடாக மீன்களை அடைந்து மீன்களில் சேமித்து வைக்கப்படுகின்றது அதாவது பயோஅக்குமலேஷன் எனும் செயல்முறை மூலமாக இவ்வாறு மீன்களின் உடலில் செல்லும் மைக்ரோ பிளாஸ்டிக் பின்பு உணவு மூலமாக மனித உடலில் சேர்கின்றது இந்த சந்தர்ப்பத்தில் அந்த மைக்ரோ பிளாஸ்டிக் மனித இரத்தத்தில் கலப்பதால் மனிதர்களுக்கு பல்வேறுபட்டு நோய்கள் உருவாகின்றன உதாரணமாக மாரடைப்பு மற்றும் சிறுநீரக செயலிழப்பு

## 2. விலங்கு கழிவுகள் மூலம்

விலங்கு கழிவுகள் அதாவது டயபர் மற்றும் விலங்குகளின் எலும்பு அதாவது மாட்டின் எலும்பு இறந்த விலங்குகள் இவ்வாறு பல்வேறுபட்ட விலங்குக்கழிவுகள் இவ்விடத்தில் கிடக்கின்றது இவை பிற்காலத்தில் மீத்தேன் வாயுவாகவும் பாக்டீரியாவாகவும் மாற்றமடைந்து நீரிலும் காற்றிலும் கலக்கின்றது இதனால் நீரில் கலக்கும் பாக்டீரியாக்கள் மீன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது காற்றில் கலக்கும் மீத்தேன்

சூழலில் காணப்படும் விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது

## 3.இரசாயன கழிவுகளால் ஏற்படும் பிரச்சனை

இவ்விடத்தில் ஈய அமில மின்கலம் மற்றும் சிறிய AA,AAA மின்கலங்கள் இவ்விடத்தில் காணப்படுகின்றது இவற்றில் இருந்து வெளியேறும் ஈயம் மற்றும் அமிலம் கடலுக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்றது அது மாத்திரமின்றி மீன்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தி உணவின் ஊடாக மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது விளக்கமாக கூறினால் அமிலமானது கடலில் கலப்பதன் மூலம் கடலின் அமிலத்தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது இதனால் கடல் வாழ் அங்கிகள் மாத்திரமன்றி கடல்வாழ் தாவரங்களை அழிவடைய செய்கின்றது ஈயமானது கடலில் கலந்து மீன்களில் உடலில் சேமிக்கப்படுவதால் மீன்களை உண்ணும் மனிதர்களுக்கு புற்றுநோய் மற்றும் பல்வேறுபற்று நோய்கள் உருவாகின்றது

## தீர்வு

பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக இருக்கக்கூடிய மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை பயன்படுத்தல்

மக்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களையும் துண்டு பிரசுரங்களையும் வழங்குதல்

கடற்கரையை சுத்தம் செய்து கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள

CamScanner


29.09.2024.

## <u>சிரமதானத்தின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள்</u>


சிரமதானத்திற்கு பின்















சிரமதானத்திற்குமுன்





CamScanner

எம்.ஏ.அபீர்
சுற்றாடல் கழகம் முன்னோடி
ஸாஹிரா கல்லூரி கல்முனை
நிந்தவூர் -5
2024.12.11

செயலாளர்
பிரதேச சபை
நிந்தவூர்

## கடற்கரை பிரதேசத்தினை சுத்தம் செய்து தருமாறு கோரல்

*மேற்படி பெயருடைய நான் ஸாஹிரா கல்லூரி கல்முனையில் 11 தரம் கற்கின்றேன். நிந்தவூர் கடற்கரை பிரதேசத்தில் காரைதீவுக்கு செல்லும் வழியில் மக்கள் குப்பைகளை கொட்டுகின்றனர். இதனை இதற்கு முன்னர் சுற்றாடல் முன்னோடிகளால் சிரமதான பணி மூலம் சுத்தம் செய்த போதிலும் தற்போது அவ்விடம் மீண்டும் குப்பை கூலங்களால் நிரம்பிக் காணப்படுகின்றது. இதனால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு உண்டாகிறது. விலங்குகளுக்கு அதனை உண்பதால் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இது நோய் பரவுவதற்கு வழி வகுத்திடும்.*

*எனவே மேற்படி நான் கூறிய பிரச்சினைகளை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு அப்பிரவேசத்தை துப்புரவு செய்து தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

நன்றி

இப்படிக்கு உண்மையுள்ள,

Afeez

නින්දවූර් ප්‍රාදේශීය සභාව
NINTAVUR PRADESHIYA SABHA
நிந்தவூர் பிரதேச சபை

Chairman:- 067 22 50167
Fax:- 067 20 58267
Web:- www.nintavurps.gov.lk
Office:- 06722 50035
E-Mail:- pnintavurps@yahoo.com
psnintavur@gmail.com

My No / எனது இல / මගේ අංකය: NTR/PS/PLDiv/PL4/ENV/2024/21

Date / திகதி / දිනය: 2024.12.11

MA. அழீர்,
சுற்றாடல் கழக முன்னோடி,
ஸாஹிரா கல்லூரி,
கல்முனை,

**கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்து தருமாறு கோரல்.**

மேற்படி பாடசாலையின் சுற்றாடல் கழகத்தில் அங்கத்தவராகிய தங்களின் 2024.12.11 ம் திகதியிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக் கடிதத்திற்கு அமைவாக, குறிப்பிடப்பட்ட இடத்தினை கவனத்தில் கொண்டு மிக விரைவில் சுத்தம் செய்ய~~ப்பட~~வுள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பிடப்பட்ட பிரதேசத்தை அடையாளப்படுத்தி எமக்கு தெரிவித்தமைக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்,
பிரதேச சபை,
நிந்தவூர்.

A. JAHUFER
Chief Management Service Officer
Pradeshiya Sabha
Nintavur